To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

**20 அக்டோபர் 2023- தினசரி நடப்பு நிகழ்வுகள்**

**பசுமை ஆற்றல் வழித்தடம் இரண்டாம் கட்டத்திற்கு CCEA ஒப்புதல் அளித்துள்ளது**

**CCEA- Cabinet Committee on Economic Affairs**
**GEC- Green Energy Corridor**
**ISTS-Inter State Transmission System**
**GW- Giga Watt**



**செய்தி:** பசுமை ஆற்றல் வழித்தடம் இரண்டாம் கட்டத்திற்கு CCEA ஒப்புதல் அளித்துள்ளது

**முக்கிய குறிப்புகள் :**

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCEA) பசுமை ஆற்றல் வழித்தடம் (GEC) இரண்டாம் கட்டம் மாநிலங்களுக்கு இடையேயான பரிமாற்ற அமைப்பு (ISTS) **13-ஜிகாவாட்** (GW) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (RE) திட்டத்தை லடாக்கில் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது
- இந்த திட்டம் இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிலப்பரப்பாக மாற்றியமைக்க உள்ளது .சிக்கலான நிலப்பரப்பு, கடுமையான காலநிலை மற்றும் பாதுகாப்பு உணர்திறன் ஆகியவற்றால் அறியப்படும் லடாக் பகுதியில் 13 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தை நிறுவுவதே இந்த திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.
- இத்திட்டத்தின் மொத்த செலவு **20,773.70 கோடி ரூபாய்** என மதிப்பிடப்பட்டுள்ளதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) தெரிவித்துள்ளது.

**ஒடிசா மற்றும் திரிபுராவில் புதிய ஆளுநர்கள்**




**செய்தி:**
ஒடிசா மற்றும் திரிபுராவில் குடியரசுத் தலைவர் ஆளுநர்களை நியமித்தார்.

**முக்கிய குறிப்புகள் :**

- குடியரசு தலைவர் திரௌபதி முர்மு ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ரகுபர் தாஸ் ஒடிசாவின் **26வது** ஆளுநராகவும், இந்திர சேனா ரெட்டி நல்லுவை **20வது** திரிபுராவின் ஆளுநராகவும் நியமித்தார்

**ரகுபர் தாஸ்:**

- ரகுபர் தாஸ் 2014 முதல் 2019 வரை ஜார்கண்ட் முதல்வராகப் பணியாற்றினார்.

| | |
|---|---|
| | • ஜார்க்கண்ட் முதல்வராக ஐந்தாண்டு காலத்தை முழுமையாக முடித்த **ஒரே தலைவர்** இவர்தான்.<br><br>**இந்திர சேனா ரெட்டி** :<br>• இந்திரசேனா ரெட்டி மூன்று முறை எம்.எல்.ஏ.வாகவும், தெலுங்கானாவை சேர்ந்த முக்கிய பாஜக தலைவராகவும் உள்ளார். |
| **யானைகள் ரயில்கள் மோதலில் இருந்து தடுக்க செயற்கை நுண்ணறிவு**<br> | **முக்கிய குறிப்புகள்** :<br>• ரயில் மோதல்களில் இருந்து காட்டு யானைகளை பாதுகாக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான ஆரம்ப எச்சரிக்கை முறையை **தமிழக அரசு** அறிமுகப்படுத்த உள்ளது.<br>• இந்த புதுமையான திட்டம் **எட்டிமடை(கோயம்புத்தூர்) - வாளையார் (பாலக்காட்)** ரயில் பாதையில் செயல்படுத்தப்படும். |
| **உலக தொலைதூர வேலை குறியீடு**<br> | **செய்தி:** உலக தொலைதூர வேலை குறியீட்டில் இந்தியா **64 வது** இடத்தில் உள்ளது .<br><br>**முக்கிய குறிப்புகள்** :<br>• உலக தொலைதூர வேலை குறியீட்டில் (GRWI) **108 நாடுகளில் இந்தியா 64 வது** இடத்தில் உள்ளது.<br>• இது முந்தைய ஆண்டை விட 15 இடங்கள் பின்தங்கியுள்ளதாகவும் தொலைதூர வேலைக்கான நாட்டின் தயார்நிலை குறித்து கவலைகள் எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>• உலக தொலைதூர வேலை குறியீட்டை சைபர் பாதுகாப்பு நிறுவனமான NordLayer வெளியிட்டுள்ளது.<br>• **டென்மார்க், நெதர்லாந்து மற்றும் ஜெர்மனி முறையே 1வது, 2வது மற்றும்** |

| | |
|---|---|
| | **3வது** இடங்களில் உள்ளன.<br>• அவை பின்வரும் வரைமுறை படி தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.<br>1. இணைய பாதுகாப்பு<br>2. பொருளாதார பாதுகாப்பு<br>3. டிஜிட்டல் மற்றும் இயற்பியல் உள்கட்டமைப்பு<br>4. சமூகப் பாதுகாப்பு |
| **REC நிறுவனம் தங்க மயில் விருதை வென்றுள்ளது**<br> | **முக்கிய குறிப்புகள் :**<br>• கிராமப்புற மின்மயமாக்கல் கழகம் (REC) இடர் மேலாண்மையில் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தியதற்காக மதிப்புமிக்க தங்க மயில் விருதைப் பெற்றுள்ளது.<br>• **1991 ஆம்** ஆண்டில் **இந்திய இயக்குநர்கள் நிறுவனத்தால்** (IOD) நிறுவப்பட்ட தங்க மயில்விருதுகள், கார்ப்பரேட் நிறுவனங்கள் சிறப்பிற்கான சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரமாக உருவெடுத்துள்ளன.<br>• கிராமப்புற மின்மயமாக்கல் கழகம் **ஜூலை 1969 இல்**அமைக்கப்பட்டது .<br>• இந்த நிறுவனம் **மகாரத்னா அந்தஸதை** பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது . |
| **மொபைல் முத்தம்மா**<br> | **முக்கிய குறிப்புகள் :**<br>• பொது மக்கள் நலன் கருதி ரேஷன் கடைகளில் UPI வசதி மூலம் பணம் செலுத்த **தமிழக அரசு** ஏற்பாடு செய்துள்ளது.<br>• இத்திட்டத்திற்கு **"மொபைல் முத்தம்மா"** என்று பெயரிட்டுள்ளனர்.<br>• தமிழகத்தில் உள்ள அனைத்து **ரேஷன் கடைகளிலும் டிஜிட்டல் பரிவர்த்தனை** மூலம் பொருட்கள் வாங்கும் முறை விரைவில் செயல்படுத்தப்படும். |

| | |
|---|---|
| | • இது **சென்னை** புறநகர் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |
| **அப்னா சந்திரயான் இணையதளம்**<br> | **செய்தி:** அப்னா சந்திரயான் இணையதளத்தை **கல்வி அமைச்சகம்** வெளியிட்டது.<br><br>**முக்கிய குறிப்புகள் :**<br>• சந்திரயான்-3 தொடர்பான கற்றலுக்கான அப்னா சந்திரயான் இணையதளத்தை மத்திய கல்வி அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.<br>• இந்த இணையதளம் பள்ளி மாணவர்களுக்கு சந்திரயான்-3 திட்டம் தொடர்பான வினாடி வினாக்கள் மற்றும் புதிர்கள் போன்ற செயல்பாட்டு அடிப்படையிலான தகவல்களை அவர்களுக்கு வழங்குகிறது.<br>• இந்த இணையதளத்தை **தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (NCERT)** உருவாக்கியுள்ளது. |
| **The Reverse Swing : Colonialism to Cooperation**<br> | **முக்கிய குறிப்புகள் :**<br>• **அசோக் டாண்டன்** எழுதிய 'The Reverse Swing: Colonialism to Cooperation' என்ற புத்தகத்தை இந்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் வெளியிட்டார்.<br>• பல நூற்றாண்டுகளாக வெளிநாட்டு அடிமைத்தனத்தின் வலிமிகுந்த நினைவுகளை விட்டுவிட்டு, புதிய இந்தியாவின் பெருமைக்கான புத்தகமாக எழுதப்பட்டுள்ளது.<br>• சுதந்திரத்திற்குப் பிறகு **இந்திய-இங்கிலாந்து** உறவுகளில் ஏற்பட்ட வரலாற்று நிகழ்வுகள் மற்றும் மாற்றங்களை நூலாசிரியர் எழுதியுள்ளார். |
| **COP 28**<br>**உறுப்பினர் நாடுகளின் மாநாடு 28**<br>COP- Conference of Parties | **முக்கிய குறிப்புகள் :**<br>• .COP28 என்று அழைக்கப்படும் 2023 ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு நவம்பர் 30 முதல் டிசம்பர் 12, 2023 வரை |

| | |
|---|---|
|  | **துபாயில்** நடைபெற உள்ளது .<br>• **1992 ஆம்** ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் முதல் காலநிலை உடன்படிக்கைக்குப் பின்னர் ஆண்டுதோறும் இந்த மாநாடு நடத்தப்படுகிறது<br>• .இது உலகளாவிய **வெப்பநிலை உயர்வைக்** கட்டுப்படுத்தவும் மற்றும் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தாக்கங்களுக்கு ஏற்ப கொள்கைகளை உருவாக்க அரசாங்கங்களால் நடத்தப்படுகிறது .<br>• |
| **உலக புள்ளியியல் தினம்**<br> | **முக்கிய குறிப்புகள் :**<br>• ஒவ்வொரு ஆண்டும் **அக்டோபர் 20** அன்று அனுசரிக்கப்படும் உலக புள்ளியியல் தினம், மேம்பட்ட, நம்பகமான மற்றும் உயர்தர புள்ளிவிவரங்களின் முக்கிய பங்கு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட உலகளாவிய அனுசரிப்பாகும் .<br>• உலக புள்ளியியல் தினம் **2010ஆம் ஆண்டு** பிப்ரவரியில் ஐக்கிய நாடுகள் புள்ளியியல் ஆணையத்தின் **41 வது அமர்வில்** முன்மொழியப்பட்டது.<br>• **2010 ஆம் ஆண்டு அக்டோபர் 20** ஆம் தேதியை முதல் உலக புள்ளியியல் தினமாகக் கொண்டாட ஆணையம் பரிந்துரைத்தது |

***Copyright © by Adda247***
*All rights are reserved. No part of this document may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior permission of Adda247.*